அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சை - 2019

## 65 - இரண்டாம் மொழி - தமிழ்

## புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

# கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2019
## 65 - இரண்டாம் மொழி - தமிழ்

வினாப்பத்திரம் I - 1 x 40 = 40 புள்ளிகள்

### வினாப்பத்திரம் II

※ பகுதி I இல் இருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து எவையேனும் ஒரு வினாவிற்கும் பகுதி III இல் இருந்து இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

### பகுதி I

| | | | |
|---|---|---|---|
| வினா 01 | - | கட்டுரை | 20 புள்ளிகள் |
| வினா 02 | - | படம் பார்த்து எழுதுதல். | 10 புள்ளிகள் |

### பகுதி II

| | | | | |
|---|---|---|---|---|
| வினா 03 | - | கிரகித்தல் | ஏதாவது ஒன்று | 10 புள்ளிகள் |
| வினா 04 | - | கிரகித்தல் | | |

### பகுதி III

| | | | | |
|---|---|---|---|---|
| வினா 05 | - | நிகழ்ச்சி நிரல் தயாரித்தல் | ஏதாவது ஒன்று | 10 புள்ளிகள் |
| | - | சுவரொட்டி எழுதுதல் | | |
| வினா 06 | - | தமிழில் மொழி பெயர்த்தல் | ஏதாவது ஒன்று | 10 புள்ளிகள் |
| | - | உரையாடல் | | |

மொத்தம் 60 புள்ளிகள்

| | | |
|---|---|---|
| வினாப்பத்திரம் I | - | 40 புள்ளிகள் |
| வினாப்பத்திரம் II | - | 60 புள்ளிகள் |
| மொத்தம் | - | 100 புள்ளிகள் |

# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2019

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) .............................................................................. ✓ △ $\frac{4}{5}$

..............................................................................

..............................................................................

(ii) .............................................................................. ✓ △ $\frac{3}{5}$

..............................................................................

..............................................................................

(iii) .............................................................................. ✓ △ $\frac{3}{5}$

..............................................................................

..............................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும். அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும். துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும். **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும். புள்ளி பரிவர்த்தனை செய்யும் சந்தர்ப்பங்களில் பரிவர்த்தனை செய்யப்பட்ட புள்ளியை உரிய கூட்டினுள் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

✶ **புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

ஒரு வினாப்பத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்கான புள்ளி வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் **"Total Marks"** என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.** வினாப்பத்திரம் II இற்கான புள்ளி வினாப்பத்திரம் II இற்குரிய புள்ளி பட்டியலில் பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி இறுதிப்புள்ளியை புள்ளிப்பட்டியலின் **"Total Marks"** என்ற நிரலில் பதியவும். 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் **"Total Marks"** என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**

21 - சிங்களமொழியும் இலக்கியமும், 22 - தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் **"Total Marks"** என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான புள்ளிகளை தனி தனியான புள்ளித்தாளில் பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி **"Total Marks"** எனும் நிரலில் பதிதல் வேண்டும்.

**முக்கியக் குறிப்பு :**

சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது **முழுத்தானத்தில்** வினாப்பத்திரம் I, II மற்றும் III என்ற புள்ளி பட்டியலின் உரிய நிரலில் நிரலில் உரிய வகையில் பதிதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது **தசம தானங்களில் பதியப்படலாகாது.**

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**65 | T | I, II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2019 දෙසැම්බර්**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2019 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2019**

දෙවන බස - දෙමළ **I, II**
இரண்டாம் மொழி - தமிழ் **I, II**
Second Language - Tamil **I, II**

**12. 12. 2019 / 0830 - 1140**

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**අමතර කියවීම් කාලය ප්‍රශ්න පත්‍රය කියවා ප්‍රශ්න තෝරා ගැනීමටත් පිළිතුරු ලිවීමේදී ප්‍රමුඛත්වය දෙන ප්‍රශ්න සංවිධානය කර ගැනීමටත් යොදාගන්න.**

**Use additional reading time to go through the question paper, select the questions and decide on the questions that you give priority in answering.**

## இரண்டாம் மொழி – தமிழ் I / දෙවන බස – දෙමළ I / Second Language – Tamil I

**கவனிக்க :**

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

සැලකිය යුතුයි :

(i) සියලු ම ප්‍රශ්නවලට පිළිතුරු සපයන්න.
(ii) අංක **1** සිට **40** තෙක් ප්‍රශ්නවල, දී ඇති (1), (2), (3), (4) පිළිතුරුවලින් නිවැරදි හෝ වඩාත් ගැළපෙන හෝ පිළිතුර තෝරා ගන්න.
(iii) ඔබට සැපයෙන උත්තර පත්‍රයේ එක් එක් ප්‍රශ්නය සඳහා දී ඇති කව අතුරෙන්, ඔබ තෝරා ගත් පිළිතුරෙහි අංකයට සැසඳෙන කවය තුළ (X) ලකුණ යොදන්න.
(iv) එම පිළිතුරු පත්‍රයේ පිටුපස දී ඇති අනෙක් උපදෙස් ද පරෙස්සමෙන් කියවා, ඒවා පිළිපදින්න.

**Note:**

(i) Answer **all** questions.
(ii) In each of the questions from **1** to **40**, pick one of the alternatives (1), (2), (3), (4) which is **correct** or the **most appropriate**.
(iii) **Mark a cross (X) on the number corresponding to your choice in the answer sheet.**
(iv) Further instructions are given on the back of the answer sheet. Follow them carefully.

- **1** தொடக்கம் **5** வரையுள்ள வினாக்களில் தடித்த எழுத்தில் உள்ள சொல்லிற்கு **ஒத்தகருத்துள்ள சொல்லைத்** தெரிவுசெய்க.

  **1** සිට **5** තෙක් ප්‍රශ්නවල තද කළු අකුරුවලින් ඇති පදයට සමාන පදය තෝරන්න.

  In questions from **1** to **5**, select the **synonyms** for the words in bold print.

**1.** விழா தேசிய கீதத்துடன் **ஆரம்பம்** ஆகியது.
(1) இறுதி (2) முடிவு (3) உச்சம் (4) தொடக்கம்

**2.** வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைக் கண்டு சுமன் **கவலை** கொண்டான்.
(1) மகிழ்ச்சி (2) துன்பம் (3) இன்பம் (4) வலி

**3.** பண்டிகைக் காலத்தில் **வியாபாரம்** களை கட்டியது.
(1) பண்டம் (2) வர்த்தகம் (3) பொருட்கள் (4) பணம்

**4.** வீட்டை நெருங்கும் போது அம்மாவின் சமையல் **மணம்** மூக்கைத் துளைத்தது.
(1) வாசம் (2) காரம் (3) சத்தம் (4) இனிப்பு

**5.** நானும் தங்கையும் அப்பாவோடு பாடசாலைக்குப் **போனோம்.**
(1) வந்தோம் (2) படித்தோம் (3) சென்றோம் (4) இருந்தோம்

- 6 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்களில் தடித்த எழுத்தில் உள்ள சொல்லிற்கு **எதிர்க்கருத்துள்ள சொல்லைத்** தெரிவுசெய்க.
6 සිට 10 තෙක් ප්‍රශ්නවල තද කළු අකුරුවලින් ඇති පදයට විරුද්ධ පදය තෝරන්න.
In questions from 6 to 10, select the **antonyms** for the words in bold print.

6. ஆசிரியர் மாணவர்களுக்கு **பெருக்கல்** கணக்குகளை பயிற்சியாக வழங்கினார்.
(1) வகுத்தல் (2) கூட்டல் (3) அழுத்தல் (4) தொடுத்தல்

7. பாதையில் **வலது** பக்கமாக நடந்து செல்ல வேண்டும்.
(1) மேல் (2) கீழ் (3) ஓரம் (4) இடது

8. நான் அப்பாவின் **பின்னால்** நடந்து சென்றேன்.
(1) பிறகு (2) கடைசியில் (3) முன்னால் (4) பக்கத்தால்

9. அதிவேக பாதையினூடாக **விரைவாகக்** கொழும்பைச் சென்றடையலாம்.
(1) துரிதமாக (2) மெதுவாக (3) பாதுகாப்பாக (4) நன்றாக

10. நான் ஒரு பயங்கரக் **கனவு** கண்டேன்.
(1) இரவு (2) மாலை (3) நனவு (4) பகல்

- 11 தொடக்கம் 13 வரையான வினாக்களில் தடித்த எழுத்தில் உள்ள **பேச்சு வழக்குச் சொல்லுக்கு நிகரான எழுத்து வழக்குச் சொல்லைத்** தெரிவுசெய்க.
11 සිට 13 තෙක් ප්‍රශ්නවල තද කළු අකුරුවලින් දැක්වෙන කථන බසින් ඇති පදයට අදාළ ලිඛිත පදය තෝරන්න.
In questions from 11 to 13, select the words in **written form for the words in spoken form** given in bold print.

11. பெரிய தேங்காய் **ஒண்டு** 50 ரூபாய்
(1) ஒன்னு (2) ஒன்று (3) ஒண்று (4) ஒரு

12. **உங்கட** வண்டியில் மீற்றர் இல்லையா?
(1) உங்களது (2) உங்களின்ர (3) உம்மோட (4) உங்கடது

13. தம்பி நேற்று **காலமை** வந்தான்
(1) காலத்தில் (2) காலங்காத்தால (3) காலையில் (4) காலத்தோடு

- 14 தொடக்கம் 16 வரையான ஒவ்வொரு வினாவிலுமுள்ள **இடைவெளியை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத்** தெரிவுசெய்க.
14 සිට 16 තෙක් එක් එක් ප්‍රශ්නයේ හිස්තැන පිරවීම සඳහා වඩාත් ම සුදුසු පදය තෝරන්න.
In each question from 14 to 16, select the **most suitable word to fill in the blank.**

14. குமார் தோட்டத்தில் இருந்தான். .................... தோட்டத்தில் மரங்கள் இருந்தன.
(1) அவன் (2) அவனை (3) அவனது (4) அவர்

15. .................... தமிழ் தெரியும். அவர்களுக்கு தமிழ் தெரியாது.
(1) நான் (2) எனக்கு (3) அவன் (4) நீங்கள்

16. சீகிரியா மாத்தளை மாவட்டத்தில் உள்ளது. .................... அழகான ஓவியங்கள் உள்ளன.
(1) இங்கு (2) அவை (3) அது (4) இதன்

- 17 தொடக்கம் 19 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான **முடிக்கும் சொல்லைத்** தெரிவுசெய்க.
17 සිට 19 තෙක් ප්‍රශ්නවලට සුදුසු අවසාන පදය තෝරන්න.
In questions from 17 to 19, select the suitable **ending word.**

17. கோழிக்குஞ்சு குப்பையைக் ............................
(1) கிளறின (2) கிளறினான் (3) கிளறினார் (4) கிளறியது

18. நான் நாயுடன் வீதியில் ............................
(1) சென்றோம் (2) சென்றன (3) செல்லும் (4) சென்றேன்

**19.** நாங்கள் யால சரணாலயத்துக்கு சென்றோம். அங்கே யானைக்கூட்டம் ..............................
(1) நின்றது (2) நின்றன (3) நிற்கும் (4) நிற்பவை

- **20** தொடக்கம் **22** வரையான ஒவ்வொரு வினாவிலுமுள்ள இடைவெளிக்கு **மிகப் பொருத்தமான சொல்லைத்** தெரிவுசெய்க.
**20** සිට **22** තෙක් එක් එක් ප්‍රශ්නයේ ඇති හිස්තැනට වඩාත් සුදුසු වචනය තෝරන්න.
In each question from **20** to **22**, select the **most suitable word** to fill in the blank.

**20.** விவசாயி ஒரு .............................. வளர்த்து வந்தான்.
(1) பசுவை (2) பசுவுக்கு (3) பசுவால் (4) பசுவின்

**21.** எனது .............................. சுற்றுலாவுக்கு வருகிறார்கள்.
(1) நண்பர்களும் (2) நண்பனை (3) நண்பருக்கு (4) நண்பர்களால்

**22.** அமைச்சர் .............................. எமது நன்றி
(1) அவர்களை (2) அவர்களது (3) அவர்களுக்கு (4) அவர்களின்

- **23** தொடக்கம் **25** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ள வாக்கியத்தை விடையாகப் பெறக்கூடிய **பொருத்தமான வினாவைத்** தெரிவுசெய்க.
**23** සිට **25** තෙක් එක් එක් ප්‍රශ්නයේ මුලින් දී ඇති වාක්‍යය පිළිතුර වශයෙන් ලබා ගැනීමට සුදුසු ප්‍රශ්නය තෝරන්න.
In each question from **23** to **25**, select the **suitable question** to get the sentence given at the beginning as the answer.

**23.** கைகேயி தசரதனிடம் இரு வரங்களைக் கேட்டாள்.
(1) கைகேயி தசரதனிடம் எதற்காக வரங்களைக் கேட்டாள்?
(2) கைகேயி தசரதனிடம் எத்தனை வரங்களைக் கேட்டாள்?
(3) கைகேயி தசரதனிடம் என்ன வரங்களைக் கேட்டாள்?
(4) கைகேயி தசரதனிடம் எவ்வாறான வரங்களைக் கேட்டாள்?

**24.** தீபாவளி ஐப்பசி மாதத்தில் கொண்டாடப்படுகின்றது.
(1) தீபாவளி எவ்வாறு கொண்டாடப்படுகின்றது?
(2) தீபாவளி எதற்காகக் கொண்டாடப்படுகின்றது?
(3) தீபாவளி எப்போது கொண்டாடப்படுகின்றது?
(4) தீபாவளி யாரால் கொண்டாடப்படுகின்றது?

**25.** சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது.
(1) எவை அடுப்பங்கரை நாடாது?
(2) எதனால் அடுப்பங்கரை நாடாது?
(3) எப்படி அடுப்பங்கரை நாடாது?
(4) எது அடுப்பங்கரை நாடாது?

- **26** தொடக்கம் **28** வரையான ஒவ்வொரு வினாவிலும் உள்ள இடைவெளியை நிரப்புவதற்கு **மிகப் பொருத்தமான சொல்லைத்** தெரிவுசெய்க.
**26** සිට **28** තෙක් එක් එක් ප්‍රශ්නයේ හිස්තැන සම්පූර්ණ කිරීමට වඩාත් සුදුසු පදය තෝරන්න.
In each question from **26** to **28**, select the **most suitable word** to fill in the blank.

**26.** நீங்கள் கண்டிக்கு வருவதாகக் கூறினீர்கள். .............................. நண்பர்களையும் கூட்டிக்கொண்டு வாருங்கள்.
(1) ஆனால் (2) ஏனென்றால் (3) அவ்வாறெனின் (4) எனினும்

**27.** சாரதிகள் தொலைபேசியில் கதைத்துக் கொண்டு வாகனங்களை ஓட்டுகின்றார்கள். .............................. விபத்துகள் ஏற்படுகின்றன.
(1) அதனால் (2) ஏனென்றால் (3) எனினும் (4) ஆயினும்

**28.** கடினமாக முயற்சி செய்து படித்தேன். ............................ பரீட்சையில் சித்தியடையத் தவறிவிட்டேன்.

(1) அதனால் (2) எனினும் (3) ஏனென்றால் (4) அவ்வாறெனின்

- **29, 30** ஆகிய வினாக்களில் இடம்பெறும் வாக்கியங்கள் **அறிவித்தல், அறிவுறுத்தல், தகவல், கட்டளை** என்பனவற்றுள் எதற்குரியது எனத் தெரிவுசெய்க.
  **29** හා **30** ප්‍රශ්නවල ඇතුළත් වාක්‍ය, නිවේදන, උපදෙස්, තොරතුරු, විධාන යන ඒවා අතුරෙන් කවරකට අයත් දැයි තෝරන්න.
  In questions **29** and **30**, out of the categories **announcements, instructions, information** and **orders**, select to which category the sentences belong.

**29.** சாப்பிடுவதற்கு முன்னரும் பின்னரும் கைகளைக் கழுவுங்கள்

(1) அறிவித்தல் (2) அறிவுறுத்தல் (3) தகவல் (4) கட்டளை

**30.** பொது இடங்களில் புகை பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது

(1) அறிவித்தல் (2) அறிவுறுத்தல் (3) தகவல் (4) கட்டளை

- **31, 32** ஆகிய வினாக்களில் 'அ' பிரிவில் உள்ள பகுதிக்கு **பொருத்தமான முடிக்கும் சொல் 'ஆ'** பிரிவில் உள்ளது. அவற்றை ஒழுங்கு முறையில் கொண்டமைந்த விடைகளைத் தெரிவுசெய்க.
  **31** හා **32** ප්‍රශ්නවල **'அ'** යටතේ ඇති කොටසට ගැළපෙන අවසන් පදය **'ஆ'** කොටසේ ඇත. එය නිවැරදි ලෙස ගළපා ඇති වරණය තෝරන්න.
  In questions **31** and **32**, **the appropriate ending word** for the phrases in 'அ' are given in 'ஆ'. Select the option that matches correctly.

**31.**

| அ | | ஆ | |
|---|---|---|---|
| 1. | தென்னையின் இளையது | அ. | பேருந்து நிலையம் |
| 2. | பனங்கட்டி | ஆ. | குட்டான் |
| 3. | குயில் | இ. | கூவும் |
| 4. | பஸ்வண்டி நிறுத்துமிடம் | ஈ. | பிள்ளை |

(1) ஈ, ஆ, அ, இ (2) ஈ, ஆ, இ, அ

(3) இ, ஈ, அ, ஆ (4) இ, ஆ, ஈ, அ

**32.**

| அ | | ஆ | |
|---|---|---|---|
| 1. | சிறு துரும்பும் | அ. | பிற்பகல் விளையும் |
| 2. | குடிப்பது கூழ் | ஆ. | பல்குத்த உதவும் |
| 3. | கைக்கு எட்டியது | இ. | கொப்பளிப்பது பன்னீர் |
| 4. | முற்பகல் செய்யின் | ஈ. | வாய்க்கு எட்டவில்லை |

(1) அ, இ, ஆ, ஈ (2) இ, ஆ, ஈ, அ

(3) ஈ, அ, அ, இ (4) ஆ, இ, ஈ, அ

- **33** தொடக்கம் **35** வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள சிங்களச் சொல்லிற்குப் பொருத்தமான **தமிழ்ச் சொல்லைத்** தெரிவுசெய்க.
  **33** සිට **35** තෙක් ප්‍රශ්නවල දී ඇති සිංහල වචනයට ගැළපෙන දෙමළ වචනය තෝරන්න.
  In questions from **33** to **35**, select the **Tamil word** that matches the Sinhala word.

**33.** දේශීය

(1) உள்நாடு (2) வெளிநாடு (3) பிறநாடு (4) அந்நியநாடு

**34.** ආරක්ෂාව

(1) ஆபத்து (2) எதிர்ப்பு (3) கவலை (4) பாதுகாப்பு

**35.** ජනයා

(1) ஆண்கள் (2) மாணவர்கள் (3) மக்கள் (4) பிள்ளைகள்

- **36** தொடக்கம் **37** வரையான வினாக்களுக்கு **இலக்கண வழுவற்ற** வாக்கியத்தை தெரிவுசெய்க.
**36** හා **37** ප්‍රශ්නවල දී ඇති වරණ අතුරින් **ව්‍යාකරණ නිවැරදිව යෙදී ඇති** වාක්‍යය තෝරන්න.
In questions **36** and **37**, select the sentence which is **grammatically correct.**

**36.** (1) நானும் நண்பனும் வந்தாய்.
(2) நானும் நண்பனும் வந்தோம்.
(3) நானும் நண்பனும் வந்தீர்கள்.
(4) நானும் நண்பனும் வந்தேன்.

**37.** (1) இன்று மக்களிடையே ஊடகங்கள் பிரசித்தி பெற்று விளங்குகின்றன.
(2) இன்று மக்களிடையே ஊடகங்கள் பிரசித்தி பெற்று விளங்குகின்றது.
(3) இன்று மக்களிடையே ஊடகங்கள் பிரசித்தி பெற்று விளங்கின.
(4) இன்று மக்களிடையே ஊடகங்கள் பிரசித்தி பெற்று விளங்கினது.

- **38** தொடக்கம் **40** வரையான வினாக்களில் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ள வாக்கியங்களைக் கருத்துள்ள வகையில் **பொருத்தமாக அமைக்கும் முறையைத்** தெரிவுசெய்க.
**38** සිට **40** තෙක් ප්‍රශ්නවල අපිළිවෙලට දෙන ලද වාක්‍ය **පිළිවෙලට ගළපා ඇති** වරණය තෝරන්න.
In questions from **38** to **40**, select the **correct order of sentences** and find the answer given below.

**38.** (அ) வயது வந்தோருக்கு 150 ரூபா, சிறுவர்களுக்கு 100 ரூபா.
(ஆ) எல்லோரும் படகின் இருபக்கமும் சமமாக இருங்கள்.
(இ) தம்பி, புறாமலைக்குப் போய் வர எவ்வளவு ரூபா?
(ஈ) அப்படியானால் நாங்களும் வருகின்றோம்.
(1) அ, ஆ, இ, ஈ (2) இ, ஆ, அ, ஈ
(3) இ, அ, ஈ, ஆ (4) ஈ, இ, அ, ஆ

**39.** (அ) எனவே கைகேயியினூடாக அதனைத் தடுக்க முயற்சித்தாள்.
(ஆ) தசரதனின் மூத்த மகன் இராமன் ஆவான்.
(இ) இராமன் முடிசூடுவதை கூனி விரும்பவில்லை.
(ஈ) தசரதன் இராமனுக்கு முடி சூட்ட எண்ணினான்.
(1) ஈ, ஆ, இ, அ (2) ஆ, ஈ, அ, இ
(3) ஈ, ஆ, அ, இ (4) ஆ, ஈ, இ, அ

**40.** (அ) அது சற்று நேரத்தில் புறப்படும்.
(ஆ) இறுதியாக இரவு 10.30 மணிக்கு காங்கேசன்துறை புகையிரத நிலையத்தைச் சென்றடையும்.
(இ) யாழ்தேவி புகையிரதம் 3 ஆம் மேடையில் நிறுத்தப்பட்டுள்ளது.
(ஈ) யாழ் நோக்கிப் புறப்படும் புகையிரதம் எல்லா நிலையங்களிலும் நிறுத்தப்படும்.
(1) இ, அ, ஈ, ஆ (2) இ, அ, ஆ, ஈ
(3) இ, ஆ, அ, ஈ (4) ஈ, இ, அ, ஆ

**

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහසායි
அந்தரங்கமானது

## අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2019
## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2019

විෂයය අංකය / பாட இலக்கம்: **65** විෂයය / பாடம்: **இரண்டாம்மொழி - தமிழ்**

### I පත්‍රය - පිළිතුරු
### I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 11. | 2 | 21. | 1 | 31. | 2 |
| 02. | 2 | 12. | 1 | 22. | 3 | 32. | 4 |
| 03. | 2 | 13. | 3 | 23. | 2 | 33. | 1 |
| 04. | 1 | 14. | 3 | 24. | 3 | 34. | 4 |
| 05. | 3 | 15. | 2 | 25. | 4 | 35. | 3 |
| 06. | 1 | 16. | 1 | 26. | 3 | 36. | 2 |
| 07. | 4 | 17. | 4 | 27. | 1 | 37. | 1 |
| 08. | 3 | 18. | 4 | 28. | 2 | 38. | 3 |
| 09. | 2 | 19. | 1 | 29. | 2 | 39. | 4 |
| 10. | 3 | 20. | 1 | 30. | 4 | 40. | 1 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: $\frac{25}{40}$

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: $\frac{25}{40}$

# கட்டுரை எழுதுதல்

1. பரீட்சார்த்தி எழுதிய விடயங்கள் பின்வரும் அ, ஆ, இ, என்ற மூன்று அம்சத் திட்டத்தின் படி மதிப்பிடப்பட்டு புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.

அ. உள்ளடக்கம் பொருத்தம், அளவு
வழங்கப்பட்ட தலைப்பிற்குப் பொருத்தமாக எழுதப்படல், போதியளவு விடயங்கள் இடம்பெறல், சொல்லளவு கருத்திற் கொள்ளப்படல். (08 புள்ளிகள்)

ஆ. கருத்து வெளிப்பாடும், மொழிச் செம்மையும்
கருத்துக்களைத் தெளிவாக முன்வைத்தல், எழுத்துக் கூட்டல் மற்றும் இலக்கண வழுக்கள் இன்மை (08 புள்ளிகள்)

இ. எழுதும் நுட்பங்கள்
பந்திகள் இடம்பெறல், பந்திகளுக்கிடையே தொடர்பு காணப்படல், குறியீடுகள் பொருத்தமாக இடப்படல், உறுப்பமைவாகவும் நேர்த்தியாகவும் எழுதுதல். (04 புள்ளிகள்)

2. கட்டுரைக்கான மொத்தப் புள்ளிகள்

அ. 08 புள்ளிகள்
ஆ. 08 புள்ளிகள் } 20 புள்ளிகள்
இ. 04 புள்ளிகள்

3. கட்டுரைக்குப் புள்ளி வழங்கும் முறை
எடுத்துக்காட்டு

$$\frac{04}{08}+\frac{04}{08}+\frac{03}{04}=\frac{11}{20}$$

# இரண்டாம் மொழி - தமிழ் II

**1.** பின்வரும் தலைப்புகளில் **ஒன்றைத்** தெரிவுசெய்து தரப்பட்ட விடயங்களை உள்ளடக்கி ஏறத்தாழ **100** சொற்களில் அமையுமாறு கட்டுரை ஒன்று எழுதுக.
දෙන ලද තොරතුරුවලට අනුව පහත මාතෘකාවලින් **එකක්** පිළිබඳ වචන **100** ක පමණ රචනයක් ලියන්න.
Write an essay in about **100** words on any **one** of the following topics according to the given information.

அ. நான் நேரில் பார்த்த வீதி விபத்து
- (i) விபத்து இடம்பெற்ற விதம்
- (ii) சூழவிருந்த மக்கள் செயற்பட்ட விதம்
- (iii) பொலிசார் மேற்கொண்ட நடவடிக்கைகள்
- (iv) விபத்து உணர்த்திய பாடங்கள்

ஆ. எமது ஊர் நூல்நிலையம்
- (i) நூல் நிலையத்தின் அமைவிடம்
- (ii) நூல் நிலையத்திலுள்ள வளங்கள்
- (iii) நூல் நிலையத்தைப் பயன்படுத்தும் விதம்
- (iv) நூல் நிலையத்தினால் பெற்றுக் கொள்ளக்கூடிய பயன்கள்

இ. பூங்காவின் ஒரு நாள்
- (i) பூங்காவின் பெயர் மற்றும் அமைவிடம்
- (ii) பூங்காவின் அழகிய காட்சிகள்
- (iii) பூங்காவில் பொழுதைக் கழித்த விதம்
- (iv) பூங்காவைத் தொடர்ந்து பேணிப் பாதுகாப்பதற்கு வழங்கக்கூடிய ஆலோசனைகள்

ஈ. உடற்பயிற்சியின் முக்கியத்துவம்
- (i) உடற்பயிற்சி பற்றிய அறிமுகம்
- (ii) உடற்பயிற்சியின் வகைகளும் அவற்றை மேற்கொள்ளும் விதமும்
- (iii) உடற்பயிற்சியினால் பெற்றுக்கொள்ளக்கூடிய பயன்கள்
- (iv) உடற்பயிற்சியின்மையால் ஏற்படக்கூடிய தீய விளைவுகள்

உ. பொலித்தீன் பாவனையைத் தவிர்ப்போம்.
- (i) பொலித்தீன் பாவனை பற்றிய அறிமுகம்
- (ii) இலங்கையில் பொலித்தீன் பாவனை
- (iii) பொலித்தீன் பாவனையினால் ஏற்படக்கூடிய தீய விளைவுகள்
- (iv) பொலித்தீன் பாவனையைத் தடைசெய்வதற்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்

*(20 புள்ளிகள்)*

1. அ. நான் நேரில் பார்த்த வீதி விபத்து

i. விபத்து இடம்பெற்ற விதம்
- எப்படி
- எங்கே
- எவ்வாறு
- யாருக்கிடையில்

ii. சூழவிருந்த மக்கள் செயற்பட்ட விதம்
- சத்தமிடல்
- ஓடி வரல்
- உதவி செய்தல்
- அம்பியுலன்ஸ் வண்டிக்கு அறிவித்தலும் பொலிசாருக்கு அறிவித்தலும்

iii. பொலிசார் மேற்கொண்ட நடவடிக்கைகள்
- ஆவத்து இடம்பெற்ற இடத்தை அடையாளத்தல்.
- மக்களை ஓரமாக்குதல்.
- வாகனத்தைப் பரிசீலித்தல்
- விபத்துக்குள்ளானவரை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தல்.
- பதிவுகளை மேற்கொள்ளல்.

iv. - உயிர் ரீதியான பாதிப்பு ஏற்படல்.
- உள ரீதியான பாதிப்பு ஏற்படல்.
- பொருளாதார பாதிப்பு ஏற்படல்.
- வீதி ஒழுங்கு பேணவேண்டிய அவசியத்தை வலியுறுத்தல்.

**ஆ. எமது ஊர் நூல் நிலையம்**

i. நூல் நிலையத்தின் அமைவிடம்
- ஊரின் மத்தியில் அமைந்துள்ளது.
- பிரதான வீதிக்கு அருகில் உள்ளது.
- வாகனங்களை நிறுத்துவதற்கான வசதி உள்ளது.

ii. நூல் நிலையத்திலுள்ள வளங்கள்
- சிறுவர், முதியோர், புத்தகங்கள் வகைப்படுத்தப்பட்டிருத்தல்.
- தேவையான புத்தகங்கள் உள்ளன (அரசியல், சமூக, சமய, விஞ்ஞான)
- வகைப்படுத்தப்பட்டு அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.
- அமர்ந்து வாசிப்பதற்கேற்ப மேசைகளும், கதிரைகளும் உள்ளன.
- முறையாக செயற்படும் ஊழியர்கள் காணப்படல்.
- அன்றாட பத்திரிகைகள், சஞ்சிகைகள் பெற முடிதல்.
- தொலைக்காட்சி, கம்பியூட்டர் காணப்படல்.

iii. நூல் நிலையத்தை பயன்படுத்தும் விதம்
- எப்போதும் அமைதியை பேண வேண்டும்.
- நூல்களை கவனமாக பயன்படுத்த வேண்டும்.
- நூல்களை சேதப்படுத்தக் கூடாது.
- நூல்களை வாசித்த பின் அவற்றிற்குரிய இடத்தில் திரும்பவும் வைக்க வேண்டும்.
- முக்கியமான நூல்களில் குறிப்பெடுக்க முன் ஒப்படைக்க வேண்டும்.

iv. நூல் நிலையத்தினால் பெற்றுக்கொள்ளக் கூடிய பயன்கள்
- எமக்குரிய அறிவை வளர்க்கின்றது.
- செலவின்றி அன்றாட விடயங்களை அறிய முடியும்.
- பெறுமதிமிக்க அரிய நூல் வகைகளை வாசிக்க முடியும்.
- சிறந்த பொழுதுபோக்கு
- நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள்
- நூல் வாசிப்பின் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும்.
- வழிகாட்டியாக அமையும், சிறந்த அனுபவம் கிடைக்கும்.
- ஆளுமையை வளர்க்கும்.

### இ. பூங்காவில் ஒருநாள்

i. பூங்காவின் பெயர் மற்றும் அமைவிடம்
- பூங்காவின் வகைகள்
- நகரின் மத்தியில் அமைந்திருத்தல்.
- இலகுவாகச் சென்றடையலாம்.
- கவர்ச்சிகரமான இடம், மலைகள், ஆறுகள் சூழ இருத்தல்.

ii. பூங்காவி.ன் அழகிய காட்சிகள்
- வர்ணப் பூக்களோடு கூடிய வளைவு
- பூ மரங்கள் ஒழுங்காக நாட்டப்பட்டிருத்தல்.
- அறிவித்தல் பலகைகள் வழிகாட்டும் விதத்தில் அமைந்திருத்தல்.
- ஒழுங்காகக் கத்தரித்தல்.

iii. பூங்காவில் பொழுதைக் கழித்த விதம்
- பூ மரங்களைப் பார்வையிட்டமை, சுற்றிப் பார்த்தமை.
- சிறுவர் விளையாட்டு நிகழ்ச்சிகள்
- மதிய உணவு உண்டமை.
- புகைப்படம் எடுத்தமை.

iv. பாதுகாப்பதற்கு வழங்கக் கூடிய ஆலோசனைகள்
- பூக்களைப் பிடுங்குதல் கூடாது.
- சுத்தமாக வைத்திருத்தல்.
- உணவுப் பொதிகளை கண்ட இடங்களில் வீசக் கூடாது.
- பார்வையிடும் இலக்கங்களை இடல்.

### ஈ. உடற்பயிற்சியின் முக்கியத்துவம்

i. உடற்பயிற்சி பற்றிய அறிமுகம்
- உடற்பயிற்சி என்றால் என்ன?
- உடற்பயிற்சியின் முக்கியத்துவம்

ii. உடற்பயிற்சியின் வகைகளும் அவற்றை மேற்கொள்ளும் விதமும்
- தனியாகவும், குழு நிலையிலும் உடற்பயிற்சியில் ஈடுபடுதல்.
- இயந்திரங்களை உபயோகித்து மேற்கொள்ளல்.
- பாடல்களை ஒலிக்கச் செய்து நடனமாடுதல் வகையிலான உடற்பயிற்சிகள்
- காலையிலும் மாலையிலும் ஓய்வு நேரங்களிலும் மேற்கொள்ளல்.

iii. உடற்பயிற்சியினால் மேற்கொள்ளக்கூடிய பயன்கள்
- மனித வாழ்வை இலகுபடுத்தும்.
- இரத்த ஓட்டம் சீராகும்.
- பற்பல தொற்றா நோய்களிலிருந்து பாதுகாப்பு பெறலாம்.
- மனித செயற்பாடுகளை உற்சாகப்படுத்தும்.

iv. உடற்பயிற்சியின்மையால் ஏற்படக்கூடிய தீய விளைவுகள்
- மனித வாழ்வை சீர் குலைக்கும்.
- தொற்றா நோய்கள் அதிகளவில் ஏற்படும்.
- நாளாந்த மனித செயற்பாடுகள் தடைப்படும்.

**உ. பொலித்தீன் பாவனையைத் தவிர்ப்போம்**

i. பொலித்தீன் பாவனை பற்றிய அறிமுகம்
- பொலித்தீன் பாவனை அபரிதமாக அதிகரித்துள்ளது.
- அது நவீனம் என்ற நிலையில் காணப்படுதல்.
- கொண்டு செல்வதற்கு இலகு என மக்கள் எண்ணுதல்.

ii. இலங்கையில் பொலித்தீன் பாவனை
- சோடனை செய்தல்.
- கடையில் பொருட்கள் இடுதல், கொடுத்தல்.
- பதாதைகள்
- விளம்பரப் பலகை

iii. பொலித்தீன் பாவனையினால் ஏற்படக்கூடிய தீய விளைவுகள்
- விவசாயம் பாதிப்படைதல்.
- அழகு, கவர்ச்சியற்ற சூழல் (கண்ட இடங்களில் காணப்படல்)
- நோய்கள்
- மிருகங்கள் அதனை உண்ணல் இறத்தல்.

iv. பொலித்தீன் பாவனையைத் தவிர்ப்போம்.
- ஆலோசனைகள் விளிப்படையச் செய்தல்.
- சட்ட நடவடிக்கைகள், தண்டம் அறவிடல்.
- உற்பத்தித் தடை

(20 புள்ளிகள்)

2. கீழே தரப்பட்ட படத்தை அடிப்படையாகக் கொண்டு **கருத்துள்ள வாக்கியங்கள் ஐந்து** எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் **ஆகக் குறைந்தது நான்கு** சொற்களேனும் இருத்தல் வேண்டும்.)
පහත දැක්වෙන පින්තූරය පදනම් කර ගනිමින් **අර්ථවත් වාක්‍ය පහක්** ලියන්න. (සෑම වාක්‍යයකම වචන හතරකට නොඅඩුව තිබිය යුතු ය.)
Write **five meaningful sentences** based on the picture given below. **(Each sentence should contain at least four words.)**



*(10* புள்ளிகள்*)*

**பகுதி II / II කොටස / Part II**

2. (படம் பார்த்து வசனம் எழுதுதல்)

1. இது ஒரு அழகான வகுப்பறையின் படம்.
2. இப்படத்தில் மூன்று சிறுமிகள் காணப்படுகின்றனர்.
3. இப்படத்தில் மூன்று சிறுவர்கள் காணப்படுகின்றார்கள்.
4. இப்படத்தில் சிறுவர்கள் சிலர் காணப்படுகின்றார்கள்.
5. இப்படத்தில் உள்ள ஒரு சிறுமி கரும்பலகையை அழித்துக் கொண்டிருக்கினார்.
6. இப்படத்தில் உள்ள ஒரு சிறுமி மேசையை ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கின்றார்.
7. இப்படத்தில் உள்ள ஒரு சிறுவன் சுவரை சுத்தம் செய்கின்றான்.
8. இங்கு சுவரில் ஒரு படம் மாட்டப்பட்டுள்ளது / தொங்கவிடப்பட்டுள்ளது.
9. இது எனக்கு விருப்பமான ஒரு படம் / இது நான் விரும்பும் ஒரு படம்

(இவை போன்ற படத்திற்கு பொருத்தமான வாக்கியங்களைக் கவனித்து.ப் புள்ளியிடுக.)

முழுமையான வாக்கியம் - 02 புள்ளி
வழுக்கள் உள்ள வாக்கியம் - 01 புள்ளி

(2 x 5 = 10 புள்ளிகள்)

- **3, 4** ஆம் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றுக்கு** மாத்திரம் விடை எழுதுக.
  **3** සහ **4** ප්‍රශ්නවලින් **එකකට** පමණක් පිළිතුරු ලියන්න.
  Answer only **one** question from **3** and **4.**

**3.** பின்வரும் பாடலை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு **பூரணமான வாக்கியங்களில்** விடை எழுதுக.
පහත කවි පෙළ කියවා, අසා ඇති ප්‍රශ්නවලට **සම්පූර්ණ වාක්‍යවලින්** පිළිතුරු සපයන්න.
Read the following poem and answer the questions given below in **complete sentences.**

மரங்கள் நாட்டின் வளமாம் மண்ணில் நட்டால் நலமாம்.
கண்ணுக்குக் குளிர்ச்சி தந்திடுமாம் காயும் கனியும் கொடுத்திடுமாம்.
மருந்து செய்ய உதவிடுமாம் மக்கள் நலமும் காத்திடுமாம்.
நீரைத் தேக்கி வைத்திடுமாம் நிலத்தை உறுதியாய்ச் செய்திடுமாம்.

மழையும் மரத்தால் பெய்திடுமாம் தழையும் உரமாய் மாறிடுமாம்.
அடுப்பும் எரிக்க உதவிடுமாம் ஆற்றின் கரையைக் காத்திடுமாம்.
நூதனம் மிக்க மரங்களெல்லாம் நூறு வருடம் வாழ்ந்திடுமாம்.
ஆதலால் வளர்ப்போம் மாந்தரே ஆளுக்கொன்றாய் மரங்களையே!

(1) காயும் கனியும் தருவன எவை?
(2) குளிர்ச்சி எதற்கு கிடைக்கும்?
(3) மரம் நிலத்துக்கு ஆற்றும் பணிகள் எவை?
(4) நூதனம் மிக்க மரங்கள் என்பதால் குறிப்பிடப்படுவது யாது?
(5) நாம் இயற்கையைப் பாதுகாக்கச் செய்யவேண்டியது என்ன? *(10 புள்ளிகள்)*

3.

1. மரங்கள் காயும், கனியும் தருவனவாகும் / காயும், கனியும் தருவன மரங்கள் ஆகும். / மரங்கள் காயும், கனியும் கொடுத்திடுமாம்.

2. கண்ணுக்குக் குளிர்ச்சி கிடைக்கும். / குளிர்ச்சி கண்ணுக்குக் கிடைக்கும். / கண்ணுக்குக் குளிர்ச்சி தந்திடுமாம்.

3. நிலம் நீரைத் தேக்கி வைத்திடும், உறுதியாய்ச் செய்திடும்.

4. நூறு வருடம் வாழ்ந்திடும் / நூறு வருடம் வாழ்ந்திடுமாம்

5. மரங்களை வளர்ப்போம் / மரங்களை வளர்த்திடுவோம்

| | | |
|---|---|---|
| முழுமையான வாக்கியம் | - | 02 புள்ளிகள் |
| வழுக்கள் உள்ள வாக்கியம் | - | 01 புள்ளி |

(2 x 5 = 10 புள்ளிகள்)

**4.** பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு **பூரணமான வாக்கியங்களில்** விடை எழுதுக.
පහත දැක්වෙන ඡේදය කියවා, අසා ඇති ප්‍රශ්නවලට **සම්පූර්ණ වාක්‍යවලින්** පිළිතුරු ලියන්න.
Read the following passage and answer the questions given below in **complete sentences.**

இலங்கை நாடு இயற்கை வளம் மிக்கது. காடுகள், மலைகள், நதிகள் என்பன எமது நாட்டை அழகுபடுத்துகின்றன. இங்கு பீதுருதாலகால மலை உயர்ந்த மலையாகும். மகாவலி கங்கை நீண்ட நதியாகும். நீர் வளம், நில வளம், வன வளம் நிறைந்த எமது நாட்டைப் பார்க்கச் சுற்றுலாப் பயணிகள் பலர் வருகின்றனர். இயற்கை வளங்கள் நிறைந்த எமது நாட்டில் பல்லின மக்களும் ஒற்றுமையுடன் வாழ்கின்றனர். எமது நாட்டின் அபிவிருத்திக்காக நாம் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம்.

(1) எமது நாட்டை அழகுபடுத்துவன எவை?
(2) உயர்ந்த மலை எது?
(3) நீண்ட நதி எது?
(4) சுற்றுலாப் பயணிகள் எதற்காக வருகின்றனர்?
(5) நாட்டின் அபிவிருத்திக்காக நாம் எவ்வாறு செயலாற்ற வேண்டும்?

*(10 புள்ளிகள்)*

4. 1. காடுகள், மலைகள், நதிகள் என்பன நாட்டை அழுகுபடுத்துகின்றன. / எமது நாட்டை அழகுபடுத்துவன காடுகள், மலைகள், நதிகள் என்பனவாகும்.

2. உயர்ந்த மலை பீதுருதாலகால மலை ஆகும். / பீதுருதாலகாலமலை உயர்ந்த மலையாகும்.

3. நீண்ட நதி மகாவலி கங்கை ஆகும். / மகாவலி கங்கை நீண்ட நதியாகும்.

4. சுற்றுலாப் பயணிகள் எமது நாட்டைப் பார்க்க வருகின்றனர். / எமது நாட்டைப் பார்க்க சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்.

5. நாட்டின் அபிவிருத்திக்காக நாம் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும். / நாம் நாட்டின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும்.

முழுமையான வாக்கியம் - 02 புள்ளிகள்
வழுக்கள் உள்ள வாக்கியம் - 01 புள்ளி

(2 x 5 = 10 புள்ளிகள்)

## பகுதி III / III කොටස / Part III

- **5, 6** ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.
  **5** සහ **6** ප්‍රශ්නවලට පිළිතුරු ලියන්න.
  Write answers to the questions **5** and **6**.

**5.** சித்திரை விடுமுறையைக் கழிப்பதற்காக கண்டிக்குச் செல்ல எண்ணியுள்ள நீர் அங்கு பார்க்கக்கூடிய இடங்களைப் பற்றி விசாரித்து உமது நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.
ඔබ අප්‍රේල් නිවාඩුව සඳහා නුවර ප්‍රදේශයට යාමට අදහස් කරයි. ඔබට නැරඹීමට යාම සඳහා සුදුසු ස්ථාන පිළිබඳව විමසමින් ඔබේ මිතුරකුට ලිපියක් ලියන්න.
You have planned to visit Kandy for your April vacation. Write a letter to your friend asking about the suitable places to visit.

**அல்லது**

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட 'மூலிகைச் சவர்க்காரம்' ஒன்றிற்கான விளம்பரம் ஒன்றினைத் தயாரிக்குக.
අළුතින් හඳුන්වා දෙනු ලැබූ 'ශාක සාර සබන්' වර්ගයක් පිළිබඳව වෙළඳ දැන්වීමක් සකස් කරන්න.
Prepare an advertisement about a newly introduced 'herbal soap'

5. **அமைப்பு**

| | | |
|---|---|---|
| முகவரி | - | 01 புள்ளி |
| விளிப்பு | - | 01 புள்ளி |
| முடிப்பும், ஒப்பமும் | - | 01 புள்ளி |

**உள்ளடக்கம்**
- நலம் விசாரித்தல்.
- சித்திரை மாதம் விடுமுறைப் பற்றி குறிப்பிடல்.
- பார்க்க வேண்டிய இடங்களை வினவுதல்.

**மொழிநடை**
- கருத்துத் தெளிவு
- வழுக்களின்மை
- எளிமை

| | | | |
|---|---|---|---|
| அமைப்பு | - | 03 புள்ளிகள் | |
| உள்ளடக்கம் | - | 05 புள்ளிகள் | |
| மொழிநடை | - | 02 புள்ளிகள் | 10 புள்ளிகள் |

அல்லது

**மூலிகைச் சவர்க்காரத்திற்கான விளம்பரம்**

**அமைப்பு**
- நுகர்வோரை கவரும் வகை
- சிறியதாகவும் கவர்ச்சியாகவும் இருத்தல்.

**உள்ளடக்கம்**
- நுகர்வோரைக் கவரும் சொற் கையாடல்
- சொற்கள் சிறியதாகவும் விளை திறன் கொண்டதாகவும் இருத்தல்.
- மனதில் பதியும் தன்மையைக் கொண்டிருத்தல்.

**மொழிநடை**
- கருத்துத் தெளிவு
- வழுக்களின்மை
- எளிமை

| | | |
|---|---|---|
| அமைப்பு | - | 03 புள்ளிகள் |
| உள்ளடக்கம் | - | 05 புள்ளிள் |
| மொழிநடை | - | 02 புள்ளிகள் |

(10 புள்ளிகள்)

6. பின்வரும் சிங்கள வாக்கியங்களை **அல்லது** ஆங்கில வாக்கியங்களை **தமிழில்** மொழிபெயர்க்குக.
පහත දැක්වෙන සිංහල වාක්‍ය **හෝ** ඉංග්‍රීසි වාක්‍ය **දෙමළ** භාෂාවට පරිවර්තනය කරන්න.
Translate the following Sinhala sentences **or** English sentences into **Tamil**.

(i) අපේ පාසලේ විදුහල්පතිතුමා ඉතා හොඳ කෙනෙකි.
(ii) මේ ලියුම ලිව්වේ කවුද?
(iii) මම මගේ මාමාගේ ගෙදරට ගියෙමි.
(iv) පොංගල් උත්සවය ජනවාරි මාසයේ දී පැවැත්වේ.
(v) මගේ පුතා කැඳවාගෙන යන්නේ කොහේ ද?

(i) Our School Principal is a very good Person.
(ii) Who wrote this letter?
(iii) I went to my Uncle's house.
(iv) Pongal festival is celebrated in January.
(v) Where are you taking my son?

**அல்லது**

கடன் பெறுதல் தொடர்பாக வங்கி முகாமையாளருக்கும் வாடிக்கையாளர் ஒருவருக்கும் இடையே இடம்பெறும் உரையாடல் ஒன்றை **50** சொற்களில் எழுதுக.
ණය මුදලක් ලබා ගැනීම සම්බන්ධයෙන් බැංකු කළමනාකරුවකු හා ගනුදෙනුකරුවකු අතර සිදුවන දෙබසක් වචන **50** ක් පමණ ඇතුළත් වන සේ ලියන්න.
Write a dialogue between a Bank Manager and a Customer regarding obtaining a loan, using about **50** words.

*(10 புள்ளிகள்)*

1. எங்கள் / எங்களது / எமது / பாடசாலையின் அதிபர் மிகவும் / மிக நல்லவர்.
2. இக்கடிதத்தை / இந்த கடிதத்தை / மடலை / அஞ்சலை எழுதியவர் யார்?
3. நான் என்னுடைய / எனது மாமாவின் / மாமனாரின் / வீட்டுக்கு / வீட்டிற்கு / இல்லத்துக்கு / இல்லத்திற்குப் போனேன் / சென்றேன்.
4. பொங்கல் பண்டிகை / கொண்டாட்டம் / விழா தை / ஜனவரி மாதத்தில் கொண்டாடப்படும் / நடைபெறும் / இடம்பெறும்.
5. எனது / என்னுடைய மகனை நீங்கள் எங்கே கொண்டு / அழைத்து / கூட்டிக்கொண்டு செல்கிறாய் / செல்கிறீர்கள்.

(2 x 5 =10 புள்ளிகள்)

| | | |
|---|---|---|
| முழுமையான வாக்கியமாயின் | - | 02 புள்ளி |
| வழுக்கள் உள்ள வாக்கியம் | - | 01 புள்ளி |

**அல்லது**

**உரையாடல்**

**அமைப்பு**

- உரையாடற் பாங்கில் எழுதுதல்.

**உள்ளடக்கம்**

- தலைப்புக்கு பொருத்தமானதாக இருத்தல்.

**மொழிநடை**

- பேச்சு மொழி
- கருத்துத் தெளிவு
- வழுக்களின்மை

| | | |
|---|---|---|
| அமைப்பு | - | 03 புள்ளிகள் |
| உள்ளடக்கம் | - | 05 புள்ளிகள் |
| மொழிநடை | - | 02 புள்ளிகள் |

(10 புள்ளிகள்)